## தலைநகர் கொழும்பு நகர அபிவிருத்திச் செயற்திட்டம் - 2013

தலைநகர் கொழும்பு நகர அபிவருத்திச் செயற்திட்டத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் (ஜிஓஎஸ்எல்) மீள்நிர்மாணம் மற்றும் அபிவிருத்திக்கான சர்வதேச வங்கிக்கும் (ஐபிஆர்டீ) இடையே கைச்சாத்திடப்பட்ட 2012 மே 18 ஆந் திகதிய 8145-எல்கே ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் பட்டோலை 2 இன் II (பி.3) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

### 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், குறிக்கோள்கள், நிதியளிப்பு, காலப்பகுதி என்பன

தலைநகர் கொழும்பு நகர அபிவிருத்திச் செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், நகர அபிவிருத்தி அதிகாரசபை (யூடீஏ), இலங்கை காணி மீட்டல் மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் (எஸ்எல்எல்ஆர்டீசீ), கொழும்பு மாநகர சபை (சீஎம்சீ) என்பன செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவர்களாகும். கொழும்பு நீரேந்து பிரதேசத்தில் வெள்ளம் ஏற்படுவதனைக் குறைத்தல், தெரிவுசெய்யப்பட்ட செய்துகாட்டல் முதலீடுகளினூடாக உள்ளூர் உட்கட்டமைப்பு வசதிகளையும் சேவைகளையும் புனரமைத்தல், மேம்படுத்துதல், பராமரித்தல் என்பவற்றிற்காக கொழும்பு தலைநகர் பிரதேசத்திலுள்ள உள்ளூராட்சி நிறுவனங்களின் இயலுமையினை வலுப்படுத்தல் என்பன செயற்திட்டத்தின் குறிக்கோள்களாகும். கடன் உடன்படிக்கையின் படி, செயற்திட்டத்தின் மொத்த கிரயம் யூ.எஸ்.டொலர் 321 மில்லியனானதுடன் இதில் யூ.எஸ்.டொலர் 213 மில்லியன் அல்லது 66.35 சதவீதம் மீள்நிர்மாணம் மற்றும் அபிவிருத்திக்கான சர்வதேச வங்கியினால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2012 யூலை 10 ஆந் திகதி தொடங்கியிருந்ததுடன் 2017 யூன் 30 ஆந் திகதியளவில் பூர்த்திசெய்வதற்குத் திட்டமிடப்பட்டது.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய பொருட்படுத்தக் கூடிய பிறழ் கூற்றுக்களைக் கொண்டிராத நிதிக்கூற்றுக்களைத் தயாரித்து நியாயபூர்வமாகச் சமர்ப்பிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டை வடிவமைப்பதும் அமுலாக்கலும் அதனைப் பேணுதலும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகளைத் தெரிவுசெய்து பயன்படுத்துவதும் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு போதியளவு கணக்கீட்டு மதிப்பீட்டைத் தயாரிப்பதும் இப் பொறுப்பில் உள்ளடங்கும்.

## 2. கணக்காய்வின் நோக்கேல்லையும் அபிப்பிராயத்திற்கான அடிப்படையும்

என்னுடைய கணக்காய்வுப் பரிசோதனையை அடிப்படையாகக் கொண்டு இந்நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள் மற்றும் காண்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல்வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தைக் கொண்டதாக இருந்தது. நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டது. நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினதும், வெளிப்படுத்தல்களினதும் ஆதாரத்திற்கான சான்றுகளின் பரிசோதனை, நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கையில் முகாமைத்துவத்தினால் கடைப்பிடிக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளையும் குறிப்பிடத்தக்க மதிப்பீடுகளினையும் அவற்றின் ஒட்டுமொத்த முன்வைத்தலையும் மதிப்பாய்வு செய்தல் என்பவற்றை கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு நோக்கத்திற்கு அவசியமானவை என எனது உயர் அறிவிற்கும் நம்பிக்கைக்குமேற்ப போதிய தகவல்கள் மற்றும் விளக்கங்களை நான் பெற்றுக்கொண்டேன் ஆகையினால் எனது அபிப்பிராயத்திற்கான நியாயமான அடிப்படையை எனது கணக்காய்வு வழங்கியதென நான் நம்புகின்றேன். அந்தப் பரிசோதனையில் பின்வருவனவற்றை மதிப்பீடு செய்வதற்கு அவசியமானதென தென்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள், கொடுக்கல் வாங்கல்கள், சொத்துக்கள், பொறுப்புக்கள் மற்றும் கணக்குப் பதிவேடுகள் என்பவற்றின் அத்தகைய செவ்வைகளும் உள்ளடக்கப்பட்டிருந்தன.

(அ) செயற்திட்டத்தின் முகாமைத்துவம் தொடர்பாகத் திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பகத் தன்மையையும் உறுதி செய்வதன் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவாக இருந்தனவா என்பதும்,

(ஆ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவரின் நிதிகளிலிருந்தான செயற்திட்டத்தின் செலவினம், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து எழுந்த

சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்தான கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைக் காட்டக்கூடியவாறு தொடர்ச்சியான அடிப்படையில் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் குறித்துரைக்கப்பட்ட கடன் உடன்படிக்கைகளின் அளவீடுகளுக்கு இணங்கியிருந்தனவா என்பதும்

(ஈ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும், உபகரணங்கள் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும்,

(உ) செயற்திட்டத்தினை அமுல்படுத்துவதற்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க, செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஊ) பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) விசேட (டொலர்) கணக்கிற்கான ஆரம்ப வைப்பு, அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள்நிரப்பல்கள் செயற்திட்டத்தினால் பேணப்பட்ட ஏடுகளிலும் பதிவேடுகளிலும் உண்மையாகவும் நியாயமாகவும் வெளிப்படுத்தப்பட்டுள்ளனவா என்பதுடன் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியில் உள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் (சீபீஎஸ்எல்) கணக்கேடுகளுடன் திருப்திகரமாகக் கணக்கிணக்கம் செய்யப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது கடன் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கிணங்க மீளளிப்புக்களுக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவை என நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ளப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஐ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஒ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிக் கட்டுபாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 3. அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் நான் பெற்றுக்கொண்ட தகவல்களுக்கும் மற்றும் எனக்கு அளிக்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய, இந்த அறிக்கையின் 5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து செம்மையாக்கல்களின் தாக்கத்தை தவிர்த்து,

(அ) செயற்திட்டமானது 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளை பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலைவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தருகின்றது என்றும்,

(ஆ) எந்த நோக்கங்களுக்காக நிதி ஏற்பாடு செய்யப்பட்டனவோ அந்த நோக்கங்களுக்காகவே அவை பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்

(இ) 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டின் போது விசேட (டொலர்) கணக்கிலிருந்தான பற்றுதல்களும் அக்கணக்கிற்கான மீள்நிரப்பல்களும் செயற்திட்டத்தினால் பேணப்பட்ட ஏடுகளிலும் பதிவேடுகளிலும் உண்மையாகவும் நியாயமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியில் உள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாகக் கணக்கிணக்கம் செய்யப்பட்டிருந்தன என்றும்

(ஈ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது கடன் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கிணங்க மீளளிப்புக்களுக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவை என நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ளப்பட்டிருந்தன என்றும்,

(உ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்படப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான அளவீடுகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(ஊ) கடன் உடன்படிக்கையில் முன்வைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகள் இணங்கி நடக்கப்பட்டிருந்தன என்றும் நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 4. நிதிக்கூற்றுக்கள்

### 4.1 நிதிசார் செயலாற்றல்

நிதிக்கூற்றுக்கள் மற்றும் பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களின் பிரகாரம் செயற்திட்டத்தின் மீளாய்வாண்டிற்கான செலவு ரூபா 2,358,850,955 ஆக இருந்ததுடன் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவு ரூபா 2,536,381,880 ஆக இருந்தது. மீளாய்வாண்டிற்கான செயற்திட்டத்தின் செலவு, முன்னைய ஆண்டிற்கான செலவு, 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவு என்பவற்றின் பொழிப்பு கீழே தரப்படுகின்றது.

| **விடயம்** | **திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செலவு** | | **2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவு** |
|---|---|---|---|
| | **2013** | **2012** | |
| | ரூபா | ரூபா | ரூபா |
| கணனி வன்பொருட்களும் துணைக் கருவிகளும் | 4,910,650 | 8,180,788 | 13,770,438 |
| அலுவலக உபகரணம் | 1,568,901 | 351,976 | 2,620,997 |
| தளபாடங்களும் பொருத்திகளும் | 10,049,446 | 932,656 | 11,541,544 |
| மோட்டார் வாகனங்கள் | 31,960,000 | 16,504,000 | 48,464,000 |
| அபிவிருத்திச் செலவுகள் | 2,310,361,998 | 145,529,164 | 2,459,984,901 |
| மொத்தம் | 2,358,850,995 | 171,498,584 | 2,536,381,880 |

## 4.2 விசேட (டொலர்) கணக்கு

நிதிக்கூற்றுக்கள் மற்றும் பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது விசேட (டொலர்) கணக்கின் செயற்பாடுகள் கீழே சுருக்கித் தரப்படுகின்றன.

| | **2013** | |
|---|---|---|
| | **யூ.எஸ்.டொலர்** | **ரூபா** |
| 2013 சனவரி 01 இல் உள்ளவாறான மீதி | 3,039 | 386,406 |

| | | |
|---|---|---|
| கூட்டுக:- பெறுவனவுகள் | 32,116,355 | 4,059,759,618 |
| வெளிநாட்டு நாணயமாற்று இலாபம் | - | 123,719,882 |
| | -------------------- | -------------------- |
| | 32,119,394 | 4,183,865,906 |
| கழி: பற்றுதல்கள் | 17,225,767 | 2,236,479,495 |
| | -------------------- | -------------------- |
| 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி | 14,893,627 | 1,947,386,411 |
| | ========= | ========= |

## 5. கணக்காய்வு அவதானிப்புக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ரீ.பீ ஜாயா மாவத்தை மற்றும் குமாரன் ரத்னம் மாவத்தையில் வொக்சால் வீதியின் நடைபாதை முன்னேற்றத்திற்கான ஒப்பந்தம் ரூபா 522,782,319 இற்கு வழங்கப்பட்டிருந்ததுடன் அதில் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 292,241,008 தொகை செலுத்தப்பட்டிருந்தது. வொக்சால் வீதியின் இரு பக்கங்களிலும் மேற்கொள்ளப்பட்ட முன்னேற்ற வேலைகள் பாதசாரிகளின் நடைபாதைகளில் மட்டமில்லாது தரம் குறைவான கற்களை பயன்படுத்தி வண்டிப் பாதையின் இரு மருங்கிலும் வெள்ளநீர் சேர்ந்தமை போன்ற காரணங்களால் நியமதரத்தில் இருக்கவில்லை என கணக்காய்வுப் பரிசோதனையில் வெளிப்பட்டது. மேலும் இரு பகுதிகளிலும் கொங்றீட் சுவர்களை பயன்படுத்தி முற்னேற்றப்பட்டிருந்த ரீ.பீ. ஜாயா மாவத்தையின் பாதசாரிகள் நடைபாதைகளில் மண் நிரப்புதல் முறைப்படி செய்யப்பட்டிருக்கவில்லை. ஆகவே, ஒப்பந்தங்களின் கீழ் செய்யப்பட்ட முன்னேற்றங்களின் மூலம் அத்தகைய வீதிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்த முடியவில்லை என அவதானிக்கப்பட்டது.

(ஆ) நகர மண்டப சதுக்கத்தில் மாதிரி வலய அபிவிருத்தி ரூபா 77,234,251 பெறுமதியான ஒப்பந்தத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அதில், 2014 ஏப்ரல் 04 இல் உள்ளவாறு ரூபா 68,756,893 தொகை செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், மேற்பகுதி முறைப்படி மட்டமிடாமல் துப்பரவாக்கல் வேலைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. மேலும், நிலப்பரப்பு பராமரிப்பு இழிவாக மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் இதன் விளைவாக தரைகளில் செடிகள் மற்றும் வேறு சிறிய மரங்கள் வளர்ந்திருந்தன. மேலும்,

கட்டிடத்தை சுற்றியுள்ள கற்பதித்த மேற்பரப்பு வெளியாரால் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் துப்பரவாக்கப்படாமல் விடப்பட்டிருந்தது.

(இ) பொதுமக்கள் நலன்களின் முன்னேற்ற கூறின் கீழ் கொழும்பில் ஏழு வெவ்வேறு இடங்களில் பொது கழிவறைகளின் முன்னேற்றங்களிற்கான ஒப்பந்தம் ரூபா 50,953,800 இல் வழங்கப்பட்டிருந்ததுடன் அதில், 2014 மார்ச் 25 இல் உள்ளவாறு அவற்றில் ரூபா 43,960,666 செலுத்தப்பட்டிருந்தது. முன்னேற்ற வேலைகள் 2013 யூன் 24 இல் பூர்த்தியாக்கப்பட்டிருந்தது.

ஏழு கழிவறை கட்டிடதொகுதிகளில், ஐந்தில் மேற்கொள்ளப்பட்ட மாதிரிச் செவ்வையில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

- தண்ணீர் முறைமை தவறாக செயற்படுகின்றன.
- தண்ணீர் பொறி முறைமை தவறாக செயற்படுகின்றன.
- பல குழாய்கள் மற்றும் உபகரணங்கள் செயற்படுகின்ற நிலையில் இருக்கவில்லை.
- மின் உபகரணங்கள் துருப்பிடித்திருந்தது.
- ஆண்கள் கழிவறைகளிற்காக பொருத்தப்பட்ட கதவுகள் இனந்தெரியாதோரல் கழற்றப்பட்டிருந்தது.
- கூரையிலிருந்து மழைநீர் ஒழுகுகின்றது.

அத்தகைய குறைபாடுகள் குறைபாட்டு பொறுப்பு காலப்பகுதியில் இருந்த அந்த நிர்மாணங்கள் இனங்காணப்பட்டு ஒப்பந்தக்காரரால் திருத்துவதற்காக தொடர்புபடுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) கொழும்பு தலைநகரில் 04 உள்ளூராட்சி அதிகாரசபைகளின் உட்கட்டமைப்பு முன்னேற்றம் மற்றும் இயலளவை கட்டியெழுப்புவதற்காக ரூபா 5,626.66 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 49.4 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்தது.

மா நகரசபைகளின் நிதிகளின் பயன்பாட்டு விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| மா நகர சபை | ஒதுக்கப்பட்ட தொகை | | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிகளின் பயன்பாடு |
|---|---|---|---|
| | ஐ.அ.டொலர மில் | ரூபா மில் | ரூபா மில் |
| கொழும்பு மா நகரசபை | 36.2 | 4,123.18 | 884.30 |

| | | | |
|---|---|---|---|
| ஸ்ரீ ஜெயவர்த்தனபுர மாநகரசபை | 6.1 | 694.79 | 9.40 |
| தெஹிவளை கல்கிசை மாநகரசபை | 4.9 | 558.11 | 16.60 |
| கொலன்னாவ நகரசபை | 2.2 | 250.58 | - |
| | 49.4 | 5,626.66 | 910.30 |

மேற்குறிப்பிட்ட தவல்களின் படி, கொலன்னாவ நகர சபைக்காக ஒதுக்கப்பட்ட நிதிகள் மீளாய்வாண்டின் போது பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. ஆகவே, உள்ளுராட்சி அதிகாரசபை பகுதிகளில் சுகாதார வசதிகள் இன்மை, வீதிகளின் நலிவான விலை மற்றும் நகர சபைகளிற்காக பௌதீக வளங்கள் இன்மை போன்ற பிரச்சனைகளின் தீவிரத்தன்மை இனங்காணப்பட்டு முன்னுரிமை அடிப்படையில் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 6. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 6.1 நிதி மீளாய்வு

மீளாய்வாண்டிற்கான நிதிகளின் நிதியளிப்பு, பாதீட்டு ஏற்பாடு, 2013 திசெம்பர் 31 வரையுமான நிதிகளின் பயன்பாடு என்பன தொடர்பான முக்கியமான சில புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| விபரம் | கடன் உடன்படிக்கையின் படி நிதியளிப் பதற்காக உடன்பட்ட தொகை | | 2013 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு | 2013ஆம் ஆண்டின் போது பயன்படுத்தப்பட்ட நிதிகள் | | 2013 திசெம்பர் 31 வரை பயன்படுத்தப் பட்ட நிதிகள் | |
|---|---|---|---|---|---|---|---|
| | ஐ.அ டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ஐபீஆர்டீ | 213 | 27,890.22 | 4,000.00 | 16.68 | 2,183.90 | 19.18 | 2,510.96 |
| ஜிஓஎஸ்எல் | 108 | 14,141.52 | 900.00 | 3.16 | 413.31 | 3.66 | 478.22 |
| மொத்தம் | 321 | 42,031.74 | 4,900.00 | 19.84 | 2,597.21 | 22.84 | 2,989.18 |

மேற்குறிப்பிட்ட தவல்களின் படி, நிதிகளின் பயன்பாட்டு விகிதம் முதல் இரண்டு ஆண்டுச் செயற்பாடுகளின் போது மிகவும் மெதுவாக இருந்தது.

## 6.2 பௌதீகச் செயலாற்றல்

செயற்திட்ட நடவடிக்கைகள் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அத்தகைய நடவடிக்கைகள் மீதான நிதி மற்றும் பௌதீக செயலாற்றலின் விபரம் கீழே காட்டப்படுகின்றன.

(அ) கூறு 1- வெள்ள மற்றும் வடிகாலமைப்பு முகாமைத்துவம்

3 உப கூறுகளிற்காக ரூபா 16,800.25 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 147.5 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்ததுடன் ரூபா 1,148.59 மில்லியன் பெறுமதியான 4 ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டிருந்ததுடன் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 239 மில்லியன் தொகை செலவழிக்கப்பட்டிருந்தது. செய்யப்பட்ட வேலையின் விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| பொதி இலக்கம் | ஒப்பந்தத்தின் பெயர் | வற் இல்லாமல் ஒப்பந்தப் பெறுமதி | செலுத்தப்பட்ட தொகை | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பௌதீக முன்னேற்றம் | |
|---|---|---|---|---|---|
| | | | | திட்டமிட்ட முன்னேற்றம் | உள்ளபடியான முன்னேற்றம் |
| | | ரூபா மில் | ரூபா மில் | சதவீதம் | |
| எஸ்எல்ஆர்டிசீ/ டபிள்யூ/02 | அலுத்மாவத்தை மதகு, முத்துவெல்ல பெட்டி வடிகால், முகத்துவாரம் வடிகால் பிரதான வழி, முகத்துவாரம் கடலுக்குள் நீரைப் பாய்ச்சும் கால்வாயின் கரையை | 409.97 | 194.30 | 60 | 60 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | மேம்படுத்துதல் மற்றும் பிரதான வழிகான் கரையை பாதுகாத்தல் | | | | |
| யூடிஏ/டபிள்யூ/01 | தெஹிவளை கரையின் கடற்கரை பாதுகாப்பு வேலைகளின் நிர்மாணம் | 193.85 | 21.60 | 40 | 40 |
| யூடிஏ/டபிள்யூ/ 03-ஏ | கிழக்கு பெய்ரா குளத்தின் கிழக்கு கரையின் பாதுகாப்பு | 269.86 | 23.10 | 41 | 40 |
| எஸ்எல்ஆர்டிசீ/ டபிள்யூ/03-சீ | மேற்குப் பெரியாக் குளத்தின் கிழக்கு கரையின் பாதுகாப்பு | 274.91 | - | 6 | 4 |
| மொத்தம் | | 1,148.59 | 239.00 | | |

(ஆ) கூறு 2- தலைநகர் கொழும்பின் உள்ளூராட்சி அதிகாரசபைகளுக்கான இயலளவை கட்டியொழுப்புதல் மற்றும் நகர உட்கட்டமைப்பு புனரமைப்பு

---

இந்தக் கூறின் கீழ், 3 உப கூறுகளின் மூலம் 17 நடவடிக்கைகளிற்காக ரூபா 5,763.34 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 50.6 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்ததுடன் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 5,642.69 மில்லியன் பெறுமதியான 15 ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 910.3 மில்லியன் தொகையான செலவினம் செயற்திட்டத்தால் ஏற்கப்பட்டிருந்தது. செய்யப்பட்ட 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தங்களின் செயலாற்றலின் விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| **பொதி இலக்கம்** | **ஒப்பந்தத்தின் பெயர்** | **வற் இல்லாமல் ஒப்பந்தப் பெறுமதி** | **செலுத்தப்பட்ட தொகை** | **2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பௌதீக முன்னேற்றம்** | |
|---|---|---|---|---|---|
| | | | | **திட்டமிட்ட முன்னேற்றம்** | **உள்ளபடியான முன்னேற்றம்** |
| | | **ரூபா மில்** | **ரூபா மில்** | **சதவீதம்** | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சீஎம்சீ/டபிள்யூ/01 | பொது வசதிகளை மேம்படுத்தல்-பொதி 01 | 50.95 | 46.50 | 100 | 100 |
| சீஎம்சீ/டபிள்யூ/02 | நடைபாதையை மேம்படுத்தல்- பொதி 01 | 239.26 | 171.70 | 100 | 100 |
| சீஎம்சீ/டபிள்யூ/04 | நடைபாதை மேம்படுத்தல் பொதி 02 | 260.50 | 86.80 | 100 | 100 |
| சீஎம்சீ/டபிள்யூ/06 | நகர மண்டப சதுக்கத்தில் மாதிரி நவீன வலய அபிவிருத்தி பொதி– 02 | 308.88 | 270.40 | 100 | 100 |
| சீஎம்சீ/டபிள்யூ/08 | நடைபாதை மேம்படுத்தல் பொதி – 03 | 283.51 | 138.60 | 100 | 100 |
| சீஎம்சீ/டபிள்யூ/09 | நகர மண்டப சதுக்கத்தில் மாதிரி வலய அபிவிருத்தி பொதி – 01 | 77.23 | 22.60 | 100 | 100 |
| சீஎம்சீ/டபிள்யூ/07 | நகர மண்டப சதுக்க அபிவிருத்தி பொதி– 03 | 227.64 | 152.00 | 100 | 100 |
| சீஎம்சீ/டபிள்யூ/12 (8) | காலி வீதி மற்றும் ஆர்ஏ.டி மெல் மாவத்தையின் புனரமைப்பு - பொதி பீ | 1,131.10 | 58.70 | 18 | 15 |
| சீஎம்சீ/டபிள்யூ/03 | பொது வசதிகளை மேம்படுத்தல்- பொதி 02 | 44.95 | - | 07 | 12 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சீஎம்சீ/டபிள்யூ/12 (ஏ) | காலி வீதி மற்றும் ஆர்ஏ.டி மெல் மாவத்தையின் புனரமைப்பு - பொதி ஏ | 813.39 | - | 07 | 06 |
| சீஎம்சீ/டபிள்யூ/12 (சீ) | காலி வீதி மற்றும் ஆர்ஏ.டி மெல் மாவத்தையின் புனரமைப்பு - பொதி சீ | 1,360.92 | - | 03 | 03 |
| உப மொத்தம் | | 4,798.33 | 884.30 | | |
| டீஎம்எம்சீ/டபிள்யூ/02 | உட்டகட்டமைப்பு அபிவிருத்தி டிஎம்எம்சீ-பொதி 02 | 137.77 | - | 62 | 44 |
| டீஎம்எம்சீ/டபிள்யூ/03 | உட்டகட்டமைப்பு அபிவிருத்தி டிஎம்எம்சீ-பொதி 03 | 68.60 | 9.80 | 68 | 48 |
| டீஎம்எம்சீ/டபிள்யூ/01 | உட்டகட்டமைப்பு அபிவிருத்தி டிஎம்எம்சீ-பொதி 01 | 246.30 | 6.80 | 50 | 14 |
| உப மொத்தம் | | 452.67 | 16.60 | | |
| எஸ்ஜேகேவீசீ/டபிள்யூ/01 | உட்டகட்டமைப்பு அபிவிருத்தி எஸ்ஜேகேஎம்சீ - பொதி 01 | 391.69 | 9.40 | 55 | 36 |
| உப மொத்தம் | | 391.69 | 9.40 | | |
| முழு மொத்தம் | | 5,642.69 | 910.30 | | |